பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 01 ஞாயிற்றுக்கிழமை 14.03.2021 கதிர் 360

## சகோதரிகளின் கணவன்மார் ஒரே விபத்தில் பரிதாபச் சாவு

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, சிறு நாவற்குளம் பகுதியில் இன்று மதியம் 1 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரு இளம் குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளனர்.

அந்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் 2

# தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக 13இன் முழு நடைமுறையாக்கம்

## இந்தியத் தூதரிடம் சாணக்கியன் வலியுறுத்து



திருகோணமலை,மார்ச் 14

தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, அதன்மூலம் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இதன் மூலம் காணி சர்ச்சைகள் உட்பட பல பிரச்சினைகளுக்கு நாமே தீர்வைப் பெற முடியும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் தெரிவித்திருக்கின்றார். 2

## இந்திய ட்ரோலர் ஆள்களின்றி நெடுந்தீவில் கரை ஒதுங்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.14

தமிழக மீனவர்களினுடையது என நம்பப்படும் மீன்பிடி ட்ரோலர் ஒன்று நெடுந்தீவுப் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் மீன்பிடித் துறை 08/ எம்.எம்/145 2

## காட்டு யானைகளின் தாக்குதலில் 24 மணி நேரத்தில் மூவர் மரணம்!

கடந்த 24 மணித்தியாலங்களில் காட்டு யானை தாக்கியதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளத்தில் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுமார் 30 வருடங்களாக காட்டு யானை பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

இன்று அதிகாலை நகருக்கு சென்று கொண்டிருக்கும் போது கல்லடி பிரதேசத்தில் 55 வயதான ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் மக்கள் வீதியில் இறங்கி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றாலும் நிலைமையை உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை. 2

## விண்வெளி ஓடத்தை இன்று காணலாம்

சர்வதேச விண்வெளி ஓடத்தை இலங்கையர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) வானில் அவதானிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேகங்கள் அல்லாத தெளிவான வான் பரப்பில் இன்றிரவு 7.08 மணி முதல் இலங்கையர்கள் சர்வதேச விண்வெளி ஓடத்தை வெறுங்கண்களால் அவதானிக்க முடியும். 2

## உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சைகள் ஒத்திவைப்பு!

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவிருந்த கல்வி பொதுத்தராதர உயர்தர மற்றும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம்எடுக்கப்பட்டதாகஅந்ததிணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா அச்சம் காரணமாக 2

## யாழ். பண்ணைக் கடற்கரையில் துப்புரவுப் பணியில் பொலிஸார்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் லியனகேயின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸாரினால் யாழ். பண்ணை கடற்கரைப்பகுதி துப்புரவு செய்யும் பணி இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது . 2

## சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது



வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் 7 ஆவது 2







## யாழ். பண்ணைக் கடற்கரையில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ தலைமையில் யாழ்ப்பாண பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அந்தப் அணி முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் நீண்ட காலமாக பிளாஸ்டிக் மற்றும் ஏனைய கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமல் மிகவும் அசுத்தமாக காணப்பட்டது. யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவ்வீதியால் பயணித்த போது அதனை அவதானித்து இன்றைய தினம் அதனை பொலிஸார் மூலம் சுத்தப்படுத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு இணங்க இன்றைய தினம் துப்புரவு பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பணியில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டார்கள்.

## சுகாதார தொண்டர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாளாக இன்றும் தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்கப்படாத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்பு போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறுகின்ற இடத்திற்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வருகைதந்திருந்த போதிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் எவரும் இதுவரை வருகை தரவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வுக்கான ஆரம்பப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்திய உயர்ஸ்தானிகரை நேற்று திருகோணமலையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மட்டக்களப்பு மாவட்டம் சம்பந்தமான பல விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

முக்கியமாக தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, தொல்பொருள் மற்றும் மகாவலி திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும் இந்திய தூதுவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அத்துடன் எமக்கான ஆரம்பப் புள்ளியாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, அதன்மூலம் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இதன்மூலம் இவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நாமே தீர்வை பெற முடியும் என்பது தொடர்பாகவும் இரா. சாணக்கியன் வலியுறுத்தியிருந்தார்.

எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தகவல் தொழில்நுட்ப துறையை வடக்கு, கிழக்கில் நிறுவுவதற்கான பரிந்துரையினையும் இந்த சந்திப்பின் போது அவர் முன்வைத்திருந்தார்.

இதன் மூலம் பல இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க முடியும் என்பதனையும் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் காங்கேசன்துறை போன்ற இடங்களில் துறைமுகங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இங்குள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் மட்டக்களப்பு விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க இந்தியா அழுத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும், உள்ளூர் பயண சேவைகளை இதன்மூலம் உருவாக்குவதோடு சென்னைக்கான பயண கட்டமைப்புக்களை இங்கிருந்து ஏற்படுத்துவதன் மூலம் உல்லாசப் பிரயாண துறையை மேலும் அபிவிருத்தி செய்வதோடு இதன் மூலம் பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம் என்றார் அவர்.

சமகால அரசியல் விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது ஆராயப்பட்டதாகத் தெரிவித்த இரா.சாணக்கியன், இச்சந்திப்பு எமது மக்களுக்கான எதிர்கால மாற்றத்தின் முதல் படி எனவும் குறிப்பிட்டிருந்தார்.

## உயர்தரம், புலமைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாடத் திட்டங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாத்திற்குள் நிறைவு செய்வது சவாலானது என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## விண்வெளி ஓடத்தை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச விண்வெளி ஓடமானது தென் மேற்கு திசையிலிருந்து - வடகிழக்கு திசை நோக்கி இரவு 07.05 முதல் 07.12 மணி வரையான காலப் பகுதியில் பயணிக்கவுள்ளது.

இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையம் பூமியில் இருந்து 400 கிலோ மீற்றர் உயரத்தில் பயணித்த வண்ணம் உள்ளது. பூமியின் புவிஈர்ப்பு சக்திக்கு அமைய அதன் வேகம் மாறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானைகளின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனால் புத்தளம் - குருநாகல் வீதியூடான போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்க ஜயரத்ன அவ்விடத்திற்கு சென்றிருந்தார்.

புத்தளம் மாவட்ட வனஜீவராசிகள் உதவி பணிப்பாளரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தார்.

யானைகளை விரட்டும் செயற்பாடு இன்று முன்னெடுக்கப்படும் என வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இந்நிலையில், கெப்பிட்டிக்கொல்லாவ பிரதேசத்தில் யானை தாக்கி 61 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் தமது விளைநிலத்திற்கு சென்றிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமது இந்தப் பிரச்சினை தொடர்பில் எவரும் கவனத்திற்கொள்வதில்லையென மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார் - தேத்தாவாடி பகுதியில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்கான 69 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று முற்பகல் 11 மணியளவில் யானையின் தாக்குதலுக்கு குறித்த நபர் இலக்கானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பேருடன் மாடு மேய்க்க சென்றிருந்த ஒருவரே காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

## இந்திய ட்ரோலர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலக்கம் பொறிக்கப்பட்ட ட்ரோலர் விசைப் படகு ஒன்று இன்று காலை நெடுந்தீவில் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கரை ஒதுங்கிய படகு தொடர்பில் உள்ளூர் மீனவர்கள் கடற்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

மீனவர்களின் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற கடற்படையினர் தமிழக மீனவர்களிற்கு சொந்தமானது எனக் கருதப்படும் படகினை கைப்பற்றி படகில் சோதனையில் ஈடுபட்டனர். இருந்தபோதும் படகில் எவருமே இருக்கவில்லை. இதனையடுத்து கடத்தல் பொருள்கள் ஏதேனும் உள்ளனவா எனவும் தேடுதல் இடம்பெற்றது.

இவ்வாறு எவரும் அற்ற நிலையில் நெடுந்தீவை படகு அடைந்துள்ளதனால் அந்தப் படகு மூலம் சட்டவிரோதிகள் எவராவது ஊடுருவியுள்ளனரா என்பது தொடர்பில் தற்போது ஆராயப்படுவதாகக் கூறப்பட்டது.

## சகோதரிகளின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நின்ற பனை மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன் போது சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவரும் பின்னர் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

அவர்கள் செட்டிகுளத்திற்கு மரண சடங்கொன்றிற்குச் சென்று விட்டு மீண்டும் மன்னார் நோக்கி வீடு திரும்பிய போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளைத் திருமணம் செய்த 36 மற்றும் 38 வயது இளைஞர்களே இந்த விபத்தில் பலியாகியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இந்த விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**ஒடியல் மா தேவை**
ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 403 814

**பனங்கிழங்கு தேவை**
பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 011 7002

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சுரேன் ராகவனின் அளாப்பல்!

பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பார்கள்.

கதை அளந்தாலும் நம்பும்படியாக அளக்க வேண்டும்.

ஆளும் பொதுஜன பெரமுனவின் கூட்டுக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் பெற்றிருக்கும், முன்னாள் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கு வடக்குத் தமிழர்கள் சார்பில் உரைக்கப்பட வேண்டிய உபதேசமாக இது இருக்கின்றது.

அவர் நன்கு கற்றறிந்தவர், மும்மொழி விற்பனர், பௌத்த மத விவகாரங்களில் புலமையுள்ள – அதே நேரம் தமிழும் புரிந்த – கல்வியாளர். ஆனால் அதற்காகக் கற்றறிந்த தமிழர்களுக்கு – குறிப்பாக வடக்குத் தமிழர்களுக்கு – அவர் காதில் பூச்சுற்ற முனையக் கூடாது.

அவரைப் பொறுத்தவரை அவர் சேராத இடம் சேர்ந்தமையினால் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டிய கடப்பாடு – பொறுப்பு – அவருக்கு இருக்கலாம். அதற்காகத் தமிழர்களின் இனத்தின் இருப்புக்கான விவகாரத்தில் கோடரிக் காம்பாகும் பணியை அவர் சிரமேற்கொள்ளக் கூடாது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச காணிகளின் விடயங்களைக் கையாளும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ் அலுவலகக் கோப்புக்களை திடுதிப்பென யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரத்துக்கு கொண்டு செல்ல முயற்சி எடுக்கப்பட்டபோது தமிழ்த் தேசியத் தரப்புகள் பலவும் அதனை ஒன்றுபட்டு எதிர்த்தன. குறிப்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அந்த ஆவணங்களைக் கொண்டு செல்லும் முயற்சியை வழி மறிப்புப் போராட்டம் நடத்தித் தடுத்தது.

இது குறித்து மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அந்தக் கூட்டங்களில் சுரேன் ராகவனும் பங்கேற்க முடியும். அந்தக் கூட்டங்களின் தீர்மானங்களும் கூட யாழ் ஆவணங்களை அநுராதபுரத்துக்கு மாற்றக் கூடாது என்றே அமைந்தன.

அதற்கு ஒரு காரணம் இருந்தது. இருக்கின்றது.

அரச காணிகளை தொழில் முனைவோர் மற்றும் காணியற்றோருக்கு வழங்குவது என்ற பெயரில் ஒரு கபடத்திட்டம் சுரேன் ராகவனும் அணி சேர்ந்திருக்கும் ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடத்தினால் முன்னெடுக்கப்படுவது கண்கூடு.

இங்கு தமிழர் தாயகத்தில் பல்லாயிரம் தமிழ்க் குடும்பங்கள் காணியற்று அந்தரித்திருக்கின்றன. இங்குள்ள அரச காணிகளைப் பங்கிடுவதாயின் அவை முதலில் அந்த மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். முன்னுரிமை அவர்களுக்கே அளிக்கப்பட வேண்டும்.

ஆனால், சுரேன் ராகவனின் ஆளும் தரப்பு அரசின் கரவுத் திட்டம் வேறுவிதமானது.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டி வந்தமை போன்று, தமிழர் தேசம் ஒருமித்த கட்டமைப்பாக எழுந்து நின்று தன்னுடைய உரிமைகளைக் கோருவதால், அது ஒரு தேசமாக தழைத்து உறுதியாக நிற்பதற்கான காரணிகளை – அத்திவாரங்களை – தேடித் தேடி இலக்கு வைத்து அழிக்க வேண்டும் என்ற சிங்களத்தின் முனைப்பான திட்டத்தில் முழு மூச்சாக நிற்கின்றது இந்த அரசு.

தமிழர் தாயகத்தில் அரச காணிகள் என்ற பெயரில் இருப்பவற்றை தென்னிலங்கைச் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளித்து அந்தப் பிரதேசங்களை சிங்கள மயப்படுத்துவதன் மூலம் தமிழர்களுக்குத் தமது தாயக பூமி மீது – வாழிடத்தின் மீது – இருக்கும் பூர்வீக உரிமையை சிதறடிக்கலாம் என்ற நயவஞ்சக எண்ணத்துடன் அது செயற்படுகின்றது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் வைத்துக் கொண்டு இப்படிச் சிங்களவர்களுக்குவடக்குக்காணிகளைப்பகிர்ந்தளிக்கும்நச்சுவேலையை முன்னெடுத்தால் அதற்குப் பல தடைகள், இடைஞ்சல்கள், இக்கட்டுகள், இடையூறுகள் வரும் என்ற யதார்த்தம் புரிந்தமையால் அந்த ஆவணங்களோடு அலுவலகத்தை அநுராதபுரத்துக்கு மாற்றுகின்றது சிங்கள அரசு.

இந்தச் சிங்கள நயவஞ்சகத் திட்டம் இங்கு அரசியலில் ஆனா, ஆவன்னா என்று அரிச்சுவடி படித்தவர்களுக்கும் நன்கு தெரியும்.

ஆனால், கற்றறிந்த கலாநிதி சுரேன் ராகவன் அது விளங்காதவர் போல, படித்த யாழ்ப்பாண மக்களுக்கு காதில் பூச்சுற்றும் கதையை அளக்கின்றார்.

“கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஒழுங்கான ஒத்துழைப்பு வலுவாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டன” – என்று அதிமேதாவித்தனமான விளக்கமளித்து அந்தக் கொடுஞ்செயலை நியாயப்படுத்துகின்றார் அவர்.

கொஞ்சம் உப்புப் போட்டுச் சாப்பிட்டு, உணர்வு இருக்குமானால் இப்படி அறிவிலித்தனமான அரச நியாயப்பாட்டை அவர் முன்வைத்திருக்க மாட்டார். அவர் பெற்ற செஞ்சேற்றில் உப்புப் போட்டிருக்கவில்லைப் போலும்.

வடக்கை சிங்கள மயப்படுத்தும் குரூரத்துக்கு துணை போல வரலாற்றுத் தவறை இழைத்தவர் என்ற சரித்திரப் பட்டத்தை அவர் சுமக்கப் போகின்றார். அவ்வளவுதான்.

# வடக்கு காணி ஆவணம் திருடப்பட்டமைக்கு அரச அதிபரே பொறுப்புக் கூறல் வேண்டும்!

## சுமந்திரன் எம்.பி. கடும் காட்டத்துடன் தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களுக்குமான காணி ஆவணங்கள் இரவோடு இரவாகத் திருடப்பட்டு அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆவணங்கள் அவ்வாறு மாற்றப்பட்டமைக்கு அரச அதிபரே பொறுப்புக் கூற வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் அதன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ.சுமந்திரன்.

தெல்லிப்பழை மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள மாவை பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் வடக்கு மாகாண சிகை ஒப்பனையாளர்கள் சங்க உறுப்பினர்களை இன்று (ஞாயிற்றுக்கிழமை) சுமந்திரன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் உரிய காணி ஆவணங்கள் கடந்த திங்கட்கிழமை இரவோடு இரவாக அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. அதற்கான காரணம் என்ன என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இதற்கு மாவட்ட செயலரே முழுப் பொறுப்பும்.

இவ்வாறு இரவோடு இரவாகத் திருடப்பட்டு கொண்டுசெல்லப்பட்ட ஆவணங்களில் என்னென்ன ஆவணங்கள் உள்ளன என்பது எவருக்கும் தெரியாது. ஓர் அரச நிறுவனத்திலிருந்து இன்னொரு நிறுவனத்துக்கு ஆவணங்களை மாற்றிச் செல்கின்றபோது அவை ஒழுங்கு முறையில் எவை எவை என்று பதியப்பட்டு, இங்கு ஆவணப்படுத்தியே கொண்டு செல்லப்பட்டிருக்கவேண்டும். அதுதான் நிர்வாக நடைமுறை. அவ்வாறு எதுவும் நடைபெற்றனவாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த விடயம் தொடர்பில் அரச அதிபரே பொறுப்புக்கூற வேண்டும். - என்றார்.

# விமல், கம்மன்பில இருவரும் அரசிலிருந்து விலகவேண்டும்?

## கொழும்பு ஊடகம் பரபரப்புத் தகவல்



கொழும்பு, மார்ச் 14

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகிய இரண்டு அமைச்சர்களும் அரசாங்கத்திலிருந்து இராஜினாமா செய்ய வேண்டியிருக்கும் என்று தென்னிலங்கை ஊடகம்ஒன்று தெரிவித்துள்ளது.

அவர்கள் விரைவில் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டியிருக்கும் என்றும்அதேவேளை ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவுள்ளன எனவும் அந்த ஊடகம் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல்வீரவன்ஸவை அரசாங்கத்திலிருந்து நீக்கக் கோரியுள்ளனர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் உதய கம்மன்பிலவை இணை அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் பதவியில் இருந்து நீக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# கால் மிதி துடைப்பானில் தேசியக் கொடி விவகாரம்: அடுத்தகட்ட நடவடிக்கைக்கு தயாராகும் இலங்கை!

அமசோன் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசியக் கொடி வடிவம் பதிக்கப்பட்ட கால் மிதித் துடைப்பான் தொடர்பில் சீனாவில் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்துள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமசோன் இணையத்தளத்தில் இணைய வழியில் கொள்வனவு செய்யும் வகையில் விளம்பரம் செய்யப்படும் ‘இலங்கைக் கொடி வடிவ கால் மிதித் துடைப்பான்’ தொடர்பில் சமூக ஊடகத் தளங்களில் சமீபத்திய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சீனாவில் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.



இலங்கையின் தேசியக் கொடியை ஒரு கால் மிதித் துடைப்பானாக விளம்பரம் செய்துள்ளமை தொடர்பில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அமசோன் என்ற விளம்பரத் தளத்துடன் இந்த விடயம் தொடர்பில் வொஷிங்டன் டி.சி.யில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் வெளியுறவுகள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

# இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் பிரிட்டிஷ் ராணியிடம் முறையிடவுள்ள தேரர்!

நாடு இன்று இருக்கும் சூழ்நிலையில் கேள்விகள் கேட்பதற்கு எவரும் இல்லாத நிலையே காணப்படுவதாக நாரஹேன்பிட்ட அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

எனவே இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இன்று தகுதியற்றவர்கள் நாட்டின் பெரிய பதவிகளில் நாற்காலிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

எனினும் பொருத்தமானவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர் எனவும், நாடு முன்னேற வேண்டுமென்றால், பி.பி. ஜெயசுந்தரவை ஜனாதிபதி செயலாளர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# முகக்கவசம் ஒழுங்காக அணியாத பயணிகள் மீது நடவடிக்கை எடுக்க

## விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்

நாடு முழுவதும் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், டி.ஜி.சி.ஏ. உத்தரவு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், பயணிகளிடம் திரும்பத் திரும்ப அறிவுறுத்தியும் முகக்கவசத்தை உரிய முறையில் அணிய மறுத்தால் அவர்களை விமானத்தில் இருந்து இறக்கிவிட வேண்டும் எனவும், கொரோனாத் தடுப்பு விதிகளை மீறினால் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டதாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு விமானப் போக்குவரத்து அதிகரித்து வரும் நிலையில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை நாட்டில் பல இடங்களில் அதிகாரித்துள்ள நிலையில், இந்த உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

விமான நிலையத்திற்குள் நுழைவது முதல் வெளியேறுவது வரை கொரோனாத் தடுப்பு விதிகளை கடுமையாகப் பின்பற்ற வேண்டும். இதை மீறுபவர்களை உடனடியாக பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோல் டீசல் விலைகளில் 15 நாள்களாக மாற்றம் இல்லை



பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை வரலாறு காணாத உயர்வுக்குப் பின், தொடர்ந்து 15ஆவது நாளாக மாற்றியமைக்கப்படவில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பெற்றோல், டீசல் விலை 26 முறை உயர்த்தப்பட்டு வந்ததால் வரலாறு காணாத புதிய உச்சத்தைத் தொட்டது.

இந்த ஆண்டில் மட்டும் பெற்றோல் விலை 7 ரூபா 46 சதத்துக்கும், டீசல் விலை 7 ரூபா 60 சதத்துக்கும் உயர்ந்துள்ளது.

கடைசியாக பெப்ரவரி 27ஆம் நாள் விலை உயர்த்தப்பட்டுச் சென்னையில் ஒரு லீற்றர் பெற்றோல் 93 ரூபா 11 சதத்துக்கும், டீசல் 86 ரூபாய் 45 சதத்துக்கும் உள்ளது.

அதன்பின் இன்று வரை தொடர்ந்து 15 நாள்களாகப் பெற்றோல், டீசல் விலையில் எந்த மாற்றமும் இல்லை.

# ஜம்மு காஷ்மீரில் துப்பாக்கி சூடு தீவிரவாதி பலி

ஜம்மு காஷ்மீரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார் எனப் பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

ஷோபியன் நகரில் உள்ள ராவல் புரா பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து காஷ்மீர் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படை வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இதில் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்பு படை வீரர்களுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அதில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார் என அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறப்பு தினசரி 10 ஆயிரம் பக்தர்களுக்கு அனுமதி

சபரிமலை ஐயப்பன் கோவில் நடை ஒவ்வொரு தமிழ் மாத பிறப்பின் போதும், 5 நாள் பூசைக்காக திறக்கப்படுவது வழக்கம். அதே போல் பங்குனி மாத பூசைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை இன்று மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது.

மாத பூசையை முன்னிட்டு 5 நாள்கள் சிறப்பு பூசைகள் நடைபெறும். மாத பூசையின் தொடர்ச்சியாக வரும் 19ஆம் திகதி சபரிமலை ஐயப்பன் கோவிலில் பங்குனி உத்தர ஆறாட்டு திருவிழா தொடங்குகிறது.

அன்றைய தினம் காலை 7.15 மணிக்கு தந்திரி கண்டரரு ராஜீவரு திருவிழா கொடியை ஏற்றி வைப்பார். விழாவையொட்டி வழக்கமான பூசைகளுடன், ஸ்ரீ பூத பலி, உத்சவ பலி ஆகியவை நடைபெறும்.

27ஆம் திகதி இரவு சரம் குத்தியில் பள்ளி வேட்டை நடைபெறும். 28ஆம் திகதி காலை 11 மணியளவில் பம்பையில் ஆறாட்டு நடைபெறும். தொடர்ந்து அன்று மாலையில் கொடி இறக்கப்பட்டு 10 நாள் திருவிழா நிறைவு பெறும். அன்று இரவு 9 மணிக்கு அரிவராசனம் பாடி நடை அடைக்கப்படும்.



மாத பூசை மற்றும் விழா நாள்களில் 15ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை தினசரி 10 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே ஒன்லைன் முன்பதிவு அடிப்படையில் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். மேலும் ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை நடத்தி கொரோனா இல்லை என்ற சான்றிதழுடன் வர வேண்டும் என்று திருவிதாங்கூர் தேவஸ்தானம் சார்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. கொரோனாக் கட்டுப்பாடுகள் காரணமாக கடந்த ஆண்டு ஆறாட்டு திருவிழா நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகம் – மகாராஷ்டிரம் எல்லைத் தகராறு இரு மாநிலங்களுக்கு இடையேயான பஸ் நிறுத்தம்






கர்நாடகம் - மகாராஷ்டிரம் இடையே எல்லைத் தகராறு உள்ள நிலையில் இரு மாநிலங்கள் இடையேயான பஸ் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெல்காம் மாவட்டத்தில் மராத்தி பேசும் மக்கள் அதிகம் உள்ளதால் அதை மகாராஷ்டிரத்துடன் இணைக்க வேண்டும் என்கிற கோரிக்கை நெடுங்காலமாக உள்ளது.

மகாராஷ்டிரத்தின் கோலாப்பூரில் உணவகங்கள், கடைகளில் கன்னட எழுத்துக்களை மராத்திய அமைப்பினர் தார் பூசி அழித்தனர். இதற்குப் பதிலடியாகக் கர்நாடகத்தில் கன்னட அமைப்பினர் மராத்தி எழுத்துக்களைத் தார் பூசி அழித்தனர்.

பெல்காமில் சிவசேனா பிரமுகரின் காரைக் கன்னட அமைப்பினர் தாக்கிச் சேதப்படுத்தினர். இந்தத் தகராறுக்கு இடையே கோலாப்பூரில் மகாராஷ்டிர அரசுப் பஸ்கள் மீது கல்வீசித் தாக்குதல் நடைபெற்றது.

இந்நிலையில் தகாத நிகழ்வுகளைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரு மாநிலங்களுக்கும் இடையேயான பஸ் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் ஒரே நாளில் புதிதாக 25,320 பேருக்கு கொரோனா பாதிப்பு



இந்தியாவில் கடந்த 84 நாள்களில் இல்லாத வகையில் நேற்று ஒரே நாளில் புதிதாக கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டோரின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 44 நாள்களில் இல்லாத வகையில் ஒரே நாளில் கொரோனாவால் 161 பேர் உயிரிழந்தனர். மகாராஷ்டிராவில் மட்டும் புதிதாக 15 ஆயிரத்து 602 பேருக்கு கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இன்றைய நிலைவரப்படி இந்தியாவில் தற்போதைய கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 10 ஆயிரத்து 544 ஆக உள்ளது.

நேற்று மாலை வரை இந்தியாவில் 2 கோடியே 97 லட்சம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் மத்திய நலவாழ்வு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுக்கடை திறப்பு விழா அழைப்பிதழ்
15.03.2021 நாளை திங்கட்கிழமை காலை 10.00
Nflash Super Detergent
நிறுவனத்தின் முகவர் நிறுவனமான IS Distributor
கடையின் திறப்பு விழாவிற்கு அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர்
திருமதி.பிறேமினி பொன்னம்பலம்
(பிரதேச செயலாளர், வலிகாமம் மேற்கு சங்கானை)

சிறப்பு விருந்தினர்
திரு.எஸ்.நவநீதன்
உரிமையாளர்
(Nflash Super Detergent)

கௌரவ விருந்தினர்
கௌரவ. தர்மலிங்கம் நடனேந்திரன்
(தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை – சுழிபுரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி. இன்பராசா சகானா

அலுவலகங்கள், பாடசாலைகளுக்கான தொற்றுநீக்கி திரவங்கள், சகல விதமான சுகாதார மேம்பாட்டு உபகரணங்கள் மற்றும் திரவங்கள் மேலும் பல சுத்திகரிப்பு பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
HI CLEAN Brand




இல 4/1 சங்கானை கட்டிட தொகுதி,
மேல் மாடி கடை, பிரதான வீதி சங்கானை.
077 5134348 / 077 1257552
Nflash Super Detergent
607A KKS Road, Jaffna
021 222 2855

# பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் ஆப்கானிஸ்தானில் 14 பேர் பலி

**ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் உள்ள ஹெராத் நகரில் காவல்துறைத் தலைமையகத்தை குறிவைத்து பயங்கரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். நேற்று இரவு சக்திவாய்ந்த கார் குண்டு வெடித்து சிதறியதில், பெண்கள், குழந்தைகள் என 8 பேர் கொல்லப்பட்டனர். 47 பேர் காயமடைந்தனர்.**


இந்தத் தாக்குதலை தலிபான் பயங்கரவாத அமைப்பு நிகழ்த்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், தலிபான் அமைப்பு தங்களுக்கு இதில் தொடர்பு இல்லை என தெரிவித்துள்ளது.

இதேபோல் குந்தூஸ் மாகாணத்தில் இன்று நடந்த தாக்குதலில் பாதுகாப்பு படையினர் 6 பேர் கொல்லப்பட்டதாகவும், 5 வீரர்களை தலிபான் பயங்கரவாதிகள் சிறைப்பிடித்து சென்றதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த சில மாதங்களாக ஆப்கானிஸ்தானில் வன்முறை தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அரசுக்கும் தலிபான் அமைப்புக்கும் இடையே அமைதிப் பேச்சு நடைபெற்று வரும் நிலையிலும், பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொலிஸார் மற்றும் படுகொலை செய்யப்படுகின்றனர். இந்த தாக்குதலுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் கண்டனம் தெரிவித்துள்ளது.



## எவரெஸ்ட் மலையில் ஏற ஓராண்டிற்குப் பின் அனுமதி




உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் மலையில் ஏற, ஓர் ஆண்டிற்குப் பின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் அங்கு மலை ஏறுபவர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வரும் ஏப்ரல் மாதம் முதல் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் எவரெஸ்ட்டில் ஏற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது வரை 300 வெளிநாட்டினர் இதற்கு பதிவு செய்துள்ளதாகவும் இந்த எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச விண்வெளி மையத்தில் தர மேம்பாட்டு பணியில் வீரர்கள்



நடப்பாண்டில் 5ஆவது முறையாக சர்வதேச விண்வெளி மையத்தின் தர மேம்பாட்டுப் பணிகளை நாசாவின் 2 விண்வெளிவீரர்கள் மேற்கொண்டு உள்ளனர்.

சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள தர மேம்படுத்துதல் பணியை மேற்கொள்ள எக்ஸ்பெடின் 64 என்ற விண்கலம் மூலம் விண்வெளி வீரர்களை நாசா அனுப்பியது.

விண்வெளிக்கான பிரத்யேக உடை அணிந்த வீரர்கள் விண்வெளி மையத்தில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் வீடியோவை நாசா தற்போது வெளியிட்டு உள்ளது.

## இராணுவ விமானம் விபத்து கசகஸ்தானில் 4 பேர் பலி



மத்திய ஆசிய நாடுகளில் ஒன்றான கசகஸ்தானில் இன்று இராணுவ விமானம் ஒன்று தரையிறங்கும் போது கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. கசகஸ்தானின் தேசியப் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான அந்த விமானம், அந்நாட்டின் தலைநகர் நூர் - சுல்தானில் இருந்து அல்மாதி நகரில் உள்ள விமான நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தது.

இந்த விமானத்தில் விமானிகள் உள்பட மொத்தம் 6 பேர் பயணம் செய்தனர். இந்த நிலையில் அல்மாதி விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சில விநாடிகளுக்கு முன், விமானம் தரைக்கட்டுப்பாட்டுத் தளத்துடன் தொடர்பை இழந்ததாக கூறப்படுகிறது.

அந்த சமயத்தில் விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்து தரையில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## ஐ.நா.மனித உரிமை ஆணையத்திற்கு காலிஸ்தான் அமைப்பு நன்கொடை

பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ள காலிஸ்தான் ஆதரவு அமைப்பில் இருந்து ஐ.நா. மனித உரிமை ஆணையத்திற்கு 10 ஆயிரம் டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சீக்ஸ் பார் ஜஸ்டிஸ் என்ற பெயருடைய சீக்கிய அமைப்பு ஐ.நாவுக்கு இந்த நிதியை அளித்துள்ளது.

இந்த நிதியை அளித்து விவசாயிகள் போராட்டம் குறித்து ஐ.நா. விசாரணைக் குழு அமைப்பதற்கு வலியுறுத்த இந்த அமைப்பு திட்டமிட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

நிதி அளிக்கப்பட்டதை ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைய செய்தித் தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.

## வேகமாக கொரோனா இனங்கான புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது



டுபாய் உள்ளிட்ட அரபு இராச்சியத்தில் பல்வேறு பகுதிகளிலும் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வருகிறது. இதனைத்தடுக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தடுப்பூசி போடும் பணியும் விரைவாக நடந்து வருகிறது. மேலும் பரிசோதனைகள் அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டுபாய் நகரில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் பலரும் கொரோனாப் பரிசோதனையை தினமும் அதிக அளவில் செய்கின்றனர். ஆனால் அதற்கான முடிவுகள் வருவதற்கு அவர்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

எனவே இந்தப் பரிசோதனை முறைகளை விரைவுபடுத்த எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் மற்றும் புதிய ஆய்வுகளின் மூலம், தற்போது புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒருவருக்கு கொரோனாப் பாதிப்பு இருக்கிறதா என்பதை சுவாசப் பரிசோதனையின் மூலம் ஒரு நிமிடத்தில் கண்டுபிடிக்க முடியும்.

இந்தக் கருவி தொடர்பான ஆய்வுகளை, முகம்மது பின் ராஷித் மருத்துவ மற்றும் சுகாதார அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பிரெத்தோனிக்ஸ் என்ற நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து டுபாய் சுகாதார ஆணையம் செய்து வருகிறது.

இந்தப் பரிசோதனையானது நாத் அல் ஹமர் பகுதியில் உள்ள ஆரம்பச் சுகாதார மையத்தில், முதற்கட்டமாக 2 ஆயிரத்து 500 பேருக்கு சோதனை முறையில் செய்யப்பட்டது.

சிங்கப்பூர் நகரில் 180 நோயாளிகளுக்குச் சோதனை அடிப்படையில், இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் அவர்களுக்கு கொரோனாப் பாதிப்பு இருக்கிறதா என்பது 93 சதவீதம் சரியாக உள்ளது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையானது 100 சதவீதம் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அமுலுக்கு வரும். இந்தப் பரிசோதனை மூலம் கொரோனாச் சோதனை முடிவுகள் ஒரு நிமிடத்தில் தெரியவரும் என்பதால் கொரோனாப் பரிசோதனை முடிவுகள் விரைவில் கிடைக்கும். மேலும் பரிசோதனைக் கூடங்களுக்கு ஏற்பட்டுள்ள வேலைப்பளுவானது பகுதியாக குறையும்.

## பொலிஸ் விசாரணையில் கொல்லப்பட்ட ஜோர்ஜ் பிளாய்ட் குடும்பத்துக்கு நிவாரணம்



அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தின் மினியாபொலிஸ் நகரைச் சேர்ந்தவர் ஆப்பிரிக்க அமெரிக்கரான ஜோர்ஜ் பிளாய்ட். லொறி சாரதியாகன இவர் கடந்த ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி மினியாபொலிஸ் நகரில் உள்ள ஒரு கடைக்கு சென்று பொருள்களை வாங்கினார். அப்போது அவர் வழங்கிய பணத்தில் 20 டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.3,900) கள்ளநோட்டு இருந்ததாக கடையின் ஊழியர் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தார். அதன் பேரில் பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் தலைமையில் 4 பொலிஸார் அங்கு விரைந்தனர். புகார் தொடர்பாக விசாரிக்க அழைத்தபோது பிளாய்ட் பொலிஸ் வாகனத்தில் ஏற மறுத்ததாகத் தெரிகிறது.

இதையடுத்து பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் ஜோர்ஜ் பிளாய்ட்டை தரையில் கிடத்தி அவர் கழுத்தை கால் முட்டியால் அழுத்தினார். என்னால் மூச்சுவிட முடியவில்லை எழுந்திருங்கள் என ஜோர்ஜ் பிளாய்ட் கெஞ்சிய போதும் விடவில்லை. சிறிது நேரத்தில் ஜோர்ஜ் பிளாய்ட் உயிரிழந்தார்.

ஜோர்ஜ் பிளாய்ட் கழுத்தில் பொலிஸ் அதிகாரி கால் முட்டியை வைத்து அழுத்தியது, இதனால் அவர் மூச்சுவிட முடியாமல் திணறி உயிரிழந்தது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வைரலானது. இதனைத் தொடர்ந்து ஜோர்ஜ் பிளாய்டின் சாவுக்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தது. இனவெறிக்கு எதிராகவும் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனத்தை கண்டித்தும் நடந்த இந்தப் போராட்டங்கள் அமெரிக்காவையே உலுக்கியது.

இதற்கிடையே ஜோர்ஜ் பிளாய்டின் குடும்பத்தினர் இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் உட்பட 4 பொலிஸார் மற்றும் மினியா பொலிஸ் நகர நிர்வாகத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இதையடுத்து டெரிக் சாவின் உட்பட 4 பொலிஸாரும் பணிநீக்கம் செய்யப்பட்டு, கொலை வழக்கில் கைது செய்யப்பட்டனர். டெரிக் சாவின் மீது கொலை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இதில் டெரிக் சாவின் மீதான விசாரணை மினசோட்டாவின் ஹென்னெபின் நகரில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வாரம் தொடங்கியது. அப்போது குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்த டெரிக் சாவின் தனது பொலிஸ் பயிற்சியை முறையாகப் பின்பற்றியதாக கூறினார். அதனைத் தொடர்ந்து நீதிபதி வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில் டெரிக் சாவின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு அதிகபட்சமாக 65 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஜோர்ஜ் பிளாய்ட் கொலைவழக்கில் மினியாபொலிஸ் நகர நிர்வாகத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஜோர்ஜ் பிளாய்ட் குடும்பத்துக்கு 27 மில்லியன் டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.540 கோடி) நிவாரணமாக வழங்க மினியா பொலிஸ் நகர அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

இதுகுறித்து ஜோர்ஜ் பிளாய்ட் குடும்பத்தின் சட்டத்தரணி பெஞ்சமீன் கிரம்ப் கூறுகையில், அமெரிக்க வரலாற்றில் ஒரு தவறான மரணத்துக்கான வழக்கில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஒதுக்கப்படும் மிகப் பெரிய நிவாரணம் இது என்றார்.

ஜோர்ஜ் பிளாய்டின் சகோதரி பிரிட்ஜெட் பிளாய்ட் கூறுகையில், எனது சகோதரர் ஜோர்ஜ் பிளாய்டின் நீதிக்கான பயணத்தின் இந்தப் பகுதி சுமுகமாக தீர்க்கப்பட்டதில் மகிழ்ச்சி எனத் தெரிவித்தார்.

# நல்லூரில் நடக்கும் போராட்டத்தில் அம்பாறை இளைஞர்கள் பங்கேற்பு






நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அம்பாறை மாவட்ட இளைஞர்கள் சிலரும் கலந்துகொண்டு தமது ஆதரவினை வழங்கியுள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேடுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் 15 ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

நீதி வேண்டிய இந்த போராட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்திற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், மத தலைவர்கள் எனப் பலரும் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதினூடாக சிறிலங்கா அரசாங்கத்தினால் புரியப்பட்டுள்ள போர்க் குற்றங்கள், மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்திற்கு எதிராக இனவழிப்பு என்பவற்றிக்கு சர்வதேச நீதி வேண்டும் -

தமிழ் இனத்தின் மீதானா இனவழிப்பு தொடராதிருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கிகரிக்கப்பட வேண்டும்-

ஆகிய கோரிக்கைகளை முன்வைது குறித்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாவனைக்குதவாத தேயிலை விற்றவர் மட்டக்களப்பில் பொலிஸாரால் கைது!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள மாமாங்கம் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமன்றி மனித பாவனைக்கு உதவாத தேயிலை தூள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை நேற்று சனிக்கிழமை பொலிஸார் கைது



செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்தவரிடம் இருந்து 600 கிலோ தேயிலைத் தூளை மீட்டுள்ளதாக மாவட்ட குற்றவியல் விசாரணைப் பிரிவு பொறுப் பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்றவியல் விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினமான நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாமாங்கம் பிரதேசத்திலுள்ள குறித்த வீட்டை சுற்றி வளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சிலோன் தேயிலை என்ற பெயரில் மனித பாவனைக்கு உதவாத தேயிலைத் தூள் விற்பனையில் ஈடுபட்டு வந்த ஒருவரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 600 கிலோகிராம் தேயிலைத் தூளை மீட்டனர்.

குறித்த தேயிலைத்தூள் எங்கிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் கைப்பற்றப்பட்ட தேயிலைத்தூளின்மாதிரிகொழும்புக்குபகுப்பாய்வுக்கு அனுப்பவுள்ளதாகவும் இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வஹாபிசத்தை பிரச்சாரம் செய்ததற்காக 60 வயது நபர் ஒருவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு மார்ச் 14

இஸ்லாமிய வஹாபிசத்தை பிரச்சாரம் செய்தமைக்காக 60 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவனெல்ல குற்ற விசாரணைப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் ஜமாதி இஸ்லாம் அமைப்பின் முன்னாள் தலைவர் என்றும் தெரியவந்துள்ளது.

## இல்மனைற் அகழ்வு அமுல்படுத்தப்படமாட்டாது வீரசிங்க எம்.பி. தலைமையில் தீர்மானம் முற்று



மட்டக்களப்பு மார்ச் 14

திருக்கோவில் பிரதேசத்திற்குட்பட்ட உமிரி கடலோரப்பிரதேசம் இல்மனைற்அகழ்வுக்குஉட்படுத்தப்படுமா என்ற சந்தேகம் நிலவும் நிலையில், அங்கு கடந்தகாலங்களில் இதற்கெதிராக பல்வேறு எதிர்ப்பலைகள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்த போதிலும் இன்னும் அந்நடவடிக்கை கைவிடப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

திருக்கோவில் பிரதேசத்துக்குட்பட்ட பின்தங்கிய சங்கமண்கிராமம் உமிரி திருப்பதி ஆகிய குக்கிராமங்களில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் உமிரிக்கிராமம் கடலோரத்திலுள்ளது. ஆதலால் இல்மனைற் அகழ்வாளர்களின் பார்வை அக்கிராமத்திலுள்ளது.

ஆஸ்திரேலியா தம்சிலா என்ற வெளிநாட்டு கம்பனி கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து உமிரியில் இல்மனைற் அகழ்வுக்கான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கென உள்ளூரிலும் முகவர்கள் செயற்பட்டுவருகின்றனர்.

அக் கம்பனி பல மட்டங்களிலும் பலமுயற்சிகளை எடுத்துவருகின்ற போதிலும் திருக்கோவில் பிரதேச சபைத்தவிசாளர் இ.வி.கமலராஜன் பிரதேசசெயலாளர் த.கஜேந்திரன் ஆகியோரிடம் மக்கள் எதிர்ப்பு மகஜர்களை கையளித்து ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடாத்தியிருந்தனர்.

இந்த நிலையில் கடந்தவாரம் திருக்கோவில் பிரதேசசெயலகத்தில் நடைபெற்றபிரதேசஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் டபிள்யு.டி. வீரசிங்க எம்.பி. தலைமையில் முக்கியமான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

அதாவது மக்கள் விரும்பாத எந்த திட்டமும் இப்பிரதேசத்தில் அமுல்படுத்தப்படமாட்டாதுஎன்றும்குறிப்பாக இல்மனைற் அகழ்வு, ஆற்றுமணல் ஏற்றுதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

## 14 கொரோனா தொற்றாளர்களால் 7 வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக பூட்டு

திருகோணமலை மார்ச் 14

திருகோணமலை நகரில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 14 பேர் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து, அங்குள்ள 7 வர்த்தகநிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

திருகோணமலை நகர பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரதேசத்துக்குட்பட்ட திருகோணமலை நகரில் 129 பேருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர் பரிசோதனைகளிலேயே அங்குள்ள கடற்படை முகாமில் பணியாற்றும் நபரொருவர் உள்ளிட்ட 14 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அவ் தொற்றாளர்கள் பணிபுரியும் வர்த்தக நிலையங்கள் தற்காலிமாக மூடப்பட்டுள்ளதோடு, அவர்களோடு தொடர்பிலிருந்தவர்ரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஆற்றல் பேரவையின் ஏற்பாட்டில் சாதனைப் பெண்களுக்கு கௌரவம்



மட்டக்களப்பு மார்ச் 14

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆற்றல் பேரவையின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு நேற்று (13) மாலை ஆரையம்பதி சிறுவர் விளையாட்டு பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.

ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள மகளிர்களை இணைத்து இந்த நிகழ்வு நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் விருந்தினர்களின் உரைகள் நடைபெற்றதனைத் தொடர்ந்து சாதனைப் பெண்களாக தெரிவுசெய்யப்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த அசோகராசா கௌரி, கிரான்குளத்தைச் சேர்ந்த கந்தசாமி கண்ணகை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பாக்கியராசா அழகம்மா மற்றும் மாவிலங்கத்துறையைச் சேர்ந்த மங்களம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர்களான கலந்து கொண்ட மண்முனைபற்று பிரதேச செயலாளர் திருமதி ந.சத்தியானந்தி, சிரேஷ்ட சட்டத்தரணி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத்தலைவரின் இணைப்புச் செயலாளருமான திருமதி. மங்களேஸ்வரி சங்கர் மற்றும் மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுஜாத்தா குலேந்திரகுமார் ஆகியோர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஆரையம்பதி பிரதேச சபை தவிசாளர் தயானந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான தினேஷ், கந்தசாமி மற்றும் சுந்தராம்பாள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிராம உத்தியோகத்தர்களான ர.புவலெட்சுமி, வி.மனோஜா, க.அபிஷேகா, நி.மிருஜினி, கி.தயனி மற்றும் அ.சுகன்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜோ பைடனை வெள்ளைமாளிகையில் சந்திக்கிறார் ஜப்பானிய பிரதமர் சூகா



ஜப்பானிய பிரதமர் யோஷிடே சூகா அமெரிக்க அதிபர் ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பு வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக குறித்த செய்தியை பிரசுரித்துள்ள ஜப்பானியச் செய்தித்தளமான யோமியுரி குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு நடைபெறுமானால் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் வைத்துச்சந்திக்கும் முதலாவது வெளிநாட்டுத்தலைவராக ஜப்பான் பிரதமர் பெயர் பெறுவார்.

இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதும் இந்திய மற்றும் பசுபிக் பெருங்கடல்களில் பயணிப்பதற்கான சுதந்திரத் தன்மையில் இரு நாடுகளது நிலையை வலுப்படுத்துவதும் இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கங்களாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை ஜப்பானிய பிரதமரலுவலகம் உறுதிப்படுத்தாவிட்டாலும் ஜப்பான் பிரமதரின் அமெரிக்கப் பயணம் ஏப்ரல் மாதத்தின் முதல் பாதியில் நடைபெறும் என்று அமைச்சரவையின் தலைமைச் செயலாளரான கட்சனோபு காட்டோ கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

2016 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவானபோது அவரைச் சந்தித்த முதலாவது வெளிநாட்டுத் தலைவரென்ற பெருமையை அப்போதைய ஜப்பானிய பிரதமரான ஷின்சோ அபே பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் கொவிட் தாக்கம் தீவிரமாக அதிகரித்தது!

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த பிரான்ஸ் அரசாங்கம் போராடிவரும் நிலையில், நேற்று சனிக்கிழமை மட்டும் 29,759 புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வைத்தியசாலைகளில் வைரஸால் இறந்தவர்களின் மொத்த இறப்பு எண்ணிக்கை 64, 978 ஆக உயர்ந்துள்ளது. நேற்றைய தினத்தில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 169 என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகளவில் கொரோனாத் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரான்ஸ் ஆறாவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் பிரான்ஸில் காணப்படும் தளவாட மற்றும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக வைரஸ் தடுப்புத் திட்டங்களை விரைந்து முன்னெடுப்பதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஆயினும் 241,814 பேர் நேற்றைய தினத்தில் முதலாவது தடுப்பூசியைப் போட்டுக்கொண்டதாகவும் 5,061,738 பேருக்கு இதுவரை முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் 2,236,066 பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிக்கையிட்டுள்ளது.



## இரண்டாவது போட்டியில் இந்திய – இங்கிலாந்து அணிகள்!

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி இன்று அஹமதாபாத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை, இந்திய நேரப்படி இரவு 7 மணியளவில் இந்தப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இரு அணிகளும் 5 இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிவருகின்றன.

தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை - மே.இ.தீவுகள்

## 3 ஆவது போட்டி இன்று!



இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நோர்த் சவுண்டில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இந்தத் தொடரின் முதலிரு போட்டிகளையும் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிகொண்டுள்ள நிலையில் இலங்கை அணி ஆறுதல் வெற்றியையாவது பெறுமா என்பது இலங்கை கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

**வீட்டுடன் காணி தேவை**

இணுவில் கந்தசாமி கோவில், பரராஜசேகர பிள்ளையார் கோவில் சூழலில் இரண்டு பரப்புக்குள் காணி அல்லது வீட்டுடன் காணி தேவை.

தொடர்பு:-0779690990

**வீடும் காணியும் விற்பனைக்கு**

துன்னாலை மத்தி கோவிற் கடவையில் கட்டுக் கிணறு வசதியுடன் நான்கு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

★ விலை 35 லட்சம்.

தொடர்பு:-0779690990

**வேலை வாய்ப்பு**

வடமாகாணத்தில் பிரபலமாக இயங்கி வரும் என் பிளாஸ் சுப்பர் டிடயண்ட் (NFLASH SUPER DETERGENT) நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் பின்வரும் தகுதியுடைய ஆள்கள் வேண்டப்படுகின்றது.

- விற்பனை பிரதிநிதி (Sales Representotive)
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Marketing Staff)
- காட்சியறை முகாமையாளர் (Show Room Manager)

* விண்ணப்பதாரி 18வயது தொடக்கம் 50வயது வரை இருத்தல் வேண்டும்.
* முன் அனுபவம் விரும்பத்தக்கது.

உங்கள் விண்ணப்பங்களை **607, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 22.03.2021இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

# மீண்டும் சூடுபிடிக்கும் கொழும்பு அரசியல்: நாடாளுமன்றம் செல்ல தயாராகிறார் ரணில்

* முக்கிய தலைவர்களுடன் மைத்திரி மந்திராலோசனை
* ரவி, நவீன், அர்ஜூன, கரு, மங்கள ஆகியோரும் களத்தில்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தற்போது நாட்டுக்கு அத்தியாவசியமானதாகியுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஆளும் கட்சியிலிருந்தும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை ரணிலைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனவே நீண்ட நாள் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கருத்தில் கொண்டும் நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் சாதகமான தீர்மானத்தை எடுத்துள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளவுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தல்களில் பின்னடைவுகளை சந்தித்திருந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனமே உரித்தானது.

இந்தத் தேசிய பட்டியல் ஆசனத்தில் யார் நாடாளுமன்றம் செல்வது என்ற இழுபறி நிலை மிக நீண்ட காலமாக காணப்பட்டது. இவ்வாறானதொரு நிலையில் பலரினதும் வேண்டுகோளுக்கிணங்கி தேசிய பட்டியல் ஆசனத்தை பெற்றுக்கொள்ள ரணில் விருப்பம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்குள் மீண்டும் வலுவானதொரு எதிர்க்கட்சி உருவாக்குவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன தலைமையிலான குழுவினர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அதேபோன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர உள்ளிட்டவர்களும் ரணிலை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

கட்சி பதவிகளில் ஏற்பட்ட சர்ச்சையால் விரிசல்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த ரவி கருணாநாயக்க , நவீன் திசாநாயக மற்றும் அர்ஜூன ரணதுங்க ஆகியோரும் கடந்த புதன் கிழமை சிறிகொத்தாவில் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அத்துடன் முன்னாள் சபாநாயகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவருமான கரு ஜயசூரியவும் கடந்த புதன்கிழமை ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

அடுத்து வரும் தேர்ல்களை மையப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்துடன் ஏனைய கட்சிகளையும் இணைத்து அரசியல் கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பில் முக்கிய தலைவர்கள் மத்தியில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடப்படுகின்றது.

மறுபுறம் ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட ஆரம்பித்துள்ளது. கட்சிக்குள் தீர்மானங்கள் எடுக்கும் போது அதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நெருக்கமானவர்கள் தலையீடு செய்வதே இந்த முரண்பாடுகளுக்கு காரணமாகியுள்ளதாக முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமன்றி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனக்கு மிக நெருக்கமான குறிப்பிட்ட சில தலைவர்களை அழைத்துக் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பில் ஆளும் கட்சிக்குள் மேலோங் யுள்ள சுதந்திரக் கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் ஈஸ்டர் தாக்குதல் ஆணைக்குழு அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘சர்வதேச விசாரணை; பொது வாக்கெடுப்பு’: தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் உண்டு!



இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கும், தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வை வழங்கும் பொருட்டு பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கும் மத்திய அரசை வலியுறுத்தவுள்ளதாகத் தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பிரதானமாகப் போட்டியிடும் தி.மு.க. கட்சி தேர்தல் அறிக்கையை நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டது.

இந்நிலையில், அந்தத் தேர்தல் அறிக்கையில் ‘ஈழத் தமிழர் நல்வாழ்வு’ என்ற தலைப்பின் கீழ் நான்கு விடயங்களைச் செயற்படுத்துகின்றமை தொடர்பாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அதில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயற்படுத்த வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் வடக்கு கிழக்கில் நீர்த்துப்போன அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே, அங்குள்ள தமிழர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய ஈழத் தமிழர்கள், புலம்பெயர் தமிழர்கள் இடையே ஐ.நாவின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தவும் மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைக்கும் வகையில் சட்டப்பிரிவுகளை உருவாக்குவதற்கு இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் இருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வந்த தமிழர்கள் தொடர்பாகவும் கரிசனை காட்டப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கும், இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்புபவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலனாய்வுத் துறையினரால் நாம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறோம்!

காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் அமைப்பின் மட்டு. தலைவி




புலனாய்வுத் துறையினரால் தாம் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என வலிந்து காணாமலாக்கப்பட்டோர் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் இடம்பெற்றுவரும் சர்வதேச நீதிகோரிய சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் பல்வேறு தடைகளையும் தாண்டி 11ஆவது நாளாகத் தொடர்ந்து நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் அமைப்பின் உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தில், காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி பெண்கள் எத்தனையோ பேர் கண்ணீருடன் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் எனவும் அவர்களின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனமெடுத்து செயற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தாங்கள் சாறி அணிந்து வெளியில் செல்லமுடியாத நிலையில் உள்ளோம் எனவும் தங்களுக்கு மன உளைச்சல் ஏற்படுத்தும் அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தமது வீட்டில் இருந்து வெளியில் செல்லவேண்டுமானால் புலனாய்வுத் துறையினரிடம் சொல்லிவிட்டுச் செல்லவேண்டும் என்றும் விண்ணப்பம் ஒன்று பூர்த்திசெய்து தரவேண்டும் எனவும் அழுத்தங்கள் செய்யப்படுகின்றன எனவும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**தேவை**

உணவகமொன்றிற்கு அனுபவமிக்க கொத்து, ரைஸ் போடும் சமையல்காரர் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 909 0408 076 804 5014

**தேவை**

பாவித்த பழுதடைந்த வீணை விலைக்கு தேவை

183 முதலாம் குறுக்கு தெரு யாழ்ப்பாணம்.

0775563030

## வடமாகாண சிகை ஒப்பனையாளர் சங்கத்தினரை மாவிட்டபுரத்தில் இன்று சந்தித்தார் சுமந்திரன்!



யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாண சிகை ஒப்பனையாளர் சங்கத்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனை இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தெல்லிப்பழை மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள மாவை பாரதி சனசமூக நிலையத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வடமாகாண சிகை ஒப்பனையாளர் சங்கத்தைத் தொழிற் சங்கமாகப் பதிவுசெய்வது தொடர்பிலும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசனைகளையும் சட்ட வழிகாட்டல்களையும் கேட்டறிந்துகொண்டனர்.

மேற்படி சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் மற்றும் அனோஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2021இல் வெளியிடப்பெற்றது.